உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 01.06.2026 • மலர் 04 • இதழ்: 152 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 01.06.2026 • Vol : 04 • Issue : 152 • Page : 4 • Rs. 5/-

# இந்தியாவுக்கு வரும் சோழர் செப்பேடுகள்

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



புதுடெல்லி, ஜூன் 1

சோழர் கால செப்பேடுகள் குறித்து மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கூறியதாவது:

அண்மையில் நெதர்லாந்து சென்றபோது சோழர் கால செப்பேடுகளை காணும் வாய்ப்பு கிடைத்தது.

நெதர்லாந்தில் சோழ மன்னர்களுடன் தொடர்புடைய 21 பெரிய மற்றும் 3 சிறிய செப்பேடுகள் உள்ளன. சோழப்பேரரசின் முழுமையான வரலாறு கலாசாரத்தை எண்ணி பெருமை கொள்கிறோம்.

ஆனைமங்கலம் கிராமம் பௌத்த மடாலயத்திற்கு வழங்கப்பட்டதை இது குறிப்பிடுகிறது. மேலும், சோழ வம்சத்தின் சாதனைகளையும் அவை விவரிக்கின்றன

சோழர்களின் கடல் சாம்ராஜ்யம் எவ்வளவு வலிமையாக இருந்தது என்பதை காட்டும் வகையில் செப்பேடுகள் இருக்கின்றன. ஆனைமங்கலம் செப்பேடுகளை நெதர்லாந்து அரசு இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது.

ஆனைமங்கலம் கிராமம் பௌத்த மடாலயத்திற்கு வழங்கப்பட்டதை இது குறிப்பிடுகிறது. மேலும், சோழ வம்சத்தின் சாதனைகளையும் அவை விவரிக்கின்றன. தென் கிழக்கு ஆசிய நாடுகளுடனான சோழர்களின் உறவுகள் குறித்த தகவல்களும் அதில் அடங்கி உள்ளன.

இத்தகைய விலைமதிப்பற்ற பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக எங்கள் அரசாங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்தத் தகடுகள் குறித்து நாடு முழுவதிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் எனக்குத் தொடர்ந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன..உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் மத்தியில் எதிர்பார்ப்பும் மகிழ்ச்சியும் நிலவுகிறது என்றார்.

## 4 தேர்வுகளின் குளறுபடியால் ஒரு கோடி பேர் பாதிப்பு: ராகுல் காந்தி குற்றச்சாட்டு



புதுடெல்லி, ஜூன் 1

நீட், சிபிஎஸ்இ, எஸ் எஸ்சி, கியூட் ஆகிய 4 தேர்வுகளின் குளறுபடியால் ஒரு கோடி பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.

மருத்துவ இளநிலைப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு மே 3ம் தேதி நடைபெற்றது. வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததால் இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டு ஜூன் 21ம் தேதி மறுதேர்வு நடத்தப்பட உள்ளது.

சிபிஎஸ்இ 12ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவியரின் விடைத்தாள் டிஜிட்டல் முறையில் திருத்தப்பட்டதில் சர்ச்சை எழுந்திருக்கிறது. உத்தர பிரதேசம், பிஹாரில் அண்மையில் நடைபெற்ற கணினி வழியிலான எஸ் எஸ்சி தேர்வின்போது சர்வர் கோளாறால் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இந்த சூழலில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று நடைபெற்ற கணினி வழியிலான கியூட் நுழைவுத் தேர்வின் போது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதனால் சுமார் 2 மணி நேரம் கால தாமதம் ஏற்பட்டது.

இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

நீட், சிபிஎஸ்இ, எஸ் எஸ்சி, கியூட் ஆகிய 4 தேர்வுகளின் குளறுபடியால் சுமார் ஒரு கோடி மாணவ, மாணவியர் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஒரு தேர்வு கூட நேர்மையாக நடத்தப்படவில்லை.

பிரதமர் நரேந்திர மோடியை, ‘உலக குரு’ என்று அழைக்கிறார்கள். ஆனால் அவர் ஒட்டுமொத்த கல்வி முறையையும் சீர் குலைத்து உள்ளார். நீங்கள் (மோடி) ஒரு தலைமுறையின் எதிர்காலத்தை அழித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த தலைமுறை நீங்கள் செய்யும் தவறுக்கு பொறுப்பேற்க வைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் விஜய்யின் திருச்சி நிகழ்வில் 5,000 பேருக்கு மட்டுமே அனுமதி: தவெக தகவல்



சென்னை, ஜூன் 1

தமிழக முதல்வர் விஜய் இன்று (திங்கள் கிழமை) திருச்சி கிழக்கு தொகுதிக்கு நன்றி தெரிவிக்க வரும் நிகழ்ச்சியில் கியூஆர் குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 5000 பேர் மட்டுமே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது என தவெக பொதுச்செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “தமிழக வெற்றிக் கழகத் தலைவர், தமிழக முதல்வர் விஜய் கலந்துகொள்ளும், திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்கள் சந்திப்பு மற்றும் திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி, (01.06.2026) திங்கள்கிழமை, திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரி வளாகத்தில் மாலை 4.15 மணி முதல் நடைபெற உள்ளது.

காவல் துறை அனுமதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க, அனுமதி பெற்றவர்களுக்கான நிகழ்ச்சியாக மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கியூஆர் குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 5000 பேர் மட்டுமே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. கியூஆர் குறியீடு அனுமதிச் சீட்டானது, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாதுகாப்பு கருதி, கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர் சிறுமியர், பள்ளி மாணவ மாணவியர், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், உடல்நலம் குன்றியவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கான கியூஆர் குறியீடு அனுமதிச் சீட்டு வழங்கப்படவில்லை. எனவே இவர்கள் யாரும் கண்டிப்பாக வர வேண்டாம்.

காவல்துறையின் வழிகாட்டுதலின்படி, பங்கேற்பாளர்கள் தங்களது வாகனங்களை நிறுத்தும் போது, அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே, போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு நிறுத்த வேண்டும். கியூஆர் குறியீடு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு, நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உள்ளவர்களுக்குத் தேவையான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அனுமதிச் சீட்டு இல்லாத தவெகவினரும் பொதுமக்களும் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே அவர்கள் இந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி, சமூக வலைத்தள நேரலைகளில் கண்டு, கியூஆர் குறியீடு அனுமதிச் சீட்டு பெற்றிருப்பவர்கள் மட்டுமே பங்கேற்க முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.' எனத் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம். பட்டதாரி. தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## பெட்ரோல் பங்க் ஊழியர்கள் மீது 10 பேருடன் வந்த போதை கும்பல் தாக்குதல்: சசிகலா வேதனை



சென்னை, ஜூன் 1

கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை முற்றிலுமாக ஒழிக்கும்வரை சமூக விரோத செயல்கள் நடைபெறுவதை தடுக்க இயலாது என சசிகலா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் சசிகலா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தூத்துக்குடிராமேஸ்வரம் சாலையில் கீழ அரசடி பகுதியில் உள்ள பெட்ரோல் பங்கை, 10 பேருடன் வந்த கஞ்சா, மது போதை கும்பல் கட்டை மற்றும் கத்தி, அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் அங்குள்ள ஊழியர்களை தாக்கியிருப்பதாக வரும் செய்திகள் மிகவும் வேதனையளிக்கிறது.

மக்களை அச்சுறுத்தி, சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெட்ரோல் பங்க் அருகே சிறுநீர் கழித்தவர்களை தட்டிக்கேட்டதற்காக இந்த கொடூரதாக்குதல் நடைபெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை முற்றிலுமாக ஒழிக்கும்வரை சமூக விரோத செயல்கள் நடைபெறுவதை தடுக்க இயலாது.

எனவே, தமிழக மக்களின் பாதுகாப்பையும்,

இளம் சமுதாயத்தினரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை முற்றிலும் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்க வேண்டும் என தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி ராமேஸ்வரம் சாலையில் கீழ அரசடி பகுதியில் உள்ள பெட்ரோல் பங்கை தாக்கியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திரிணமூல் காங்கிரஸ் மூத்த எம்.பி. கல்யாண் பானர்ஜி மீது தாக்குதல்



கொல்கத்தா, ஜூன் 1

மேற்கு வங்க மாநிலம் ஹூக்லி மாவட்டத்தில் உள்ள சாண்டிதலா காவல் நிலையத்துக்கு வெளியில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் கல்யாண் பானர்ஜி தாக்கப்பட்டார். இந்த தாக்குதலில் அவர் தலையில் காயமடைந்தார்.

கைது செய்யப்பட்ட தங்கள் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை விடுவிக்கக் கோரி சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் மனு அளிக்க இன்று (மே 31) கல்யாண் பானர்ஜி தலைமையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினர் திரண்டனர். அப்போது அங்கு பாஜகவினரும் வந்துள்ளனர். இதையடுத்து இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அப்போதுதான் கல்யாண் பானர்ஜி தாக்கப்பட்டார்.

திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக அங்கு திரண்ட பாஜகவினர் கோஷமிட்டுள்ளனர். அப்போது “திரிணமூல் காங்கிரஸ் கட்சியினர் திருடர்கள்” எனக் கூறியுள்ளனர். அதையடுத்துதான் இரண்டு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக தகவல். கள சூழலை கட்டுக்குள் வைக்க காவலர்கள் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டனர்.

இதையடுத்து தங்கள் மீதான இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தார் கல்யாண் பானர்ஜி. அப்போது தனது தலையில் ஈரமான கைக்குட்டையை அவர் அழுத்தி பிடித்திருந்தார். அவர் கூறியது: எங்கள் மீதான தாக்குதல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. நாங்கள் காவல் நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தோம். அப்போது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. அறவழிப் போராட்டம் என்ற ஜனநாயக ரீதியான எங்கள் உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்றார்.

நேற்று (சனிக்கிழமை) மேற்கு வங்க சட்டப்பேரவை தேர்தலுக்கு பிந்தைய வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை சந்திப்பதற்காக திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. அபிஷேக் பானர்ஜி சோனார்பூர் பகுதிக்குச் சென்றிருந்தார். அப்போது அவர் மீது கற்களும் முட்டைகளும் வீசி தாக்கப்பட்டார்.

அப்போது ஹெல்மெட் அணிந்திருந்த அவரை பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். இந்தச் சம்பவத்தின் போது, பாஜக தொண்டர்கள் அபிஷேக் பானர்ஜிக்கு எதிராக ‘சோர் சோர்’ (திருடன் திருடன்) என முழக்கமிட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில், இன்று திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மற்றொரு எம்.பியான கல்யாண் பானர்ஜி மீது தாக்குதல் நடந்துள்ளது.

நடந்த முடிந்த மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. திரிணமூல் காங்கிரஸ் கட்சி ஆட்சியை இழந்தது. இதையடுத்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டன. ஒரே நேரத்தில் கவுன்சிலர்கள் தங்கள் பதவியில் இருந்து விலகினர். இந்நிலையில், அக்கட்சியின் மூத்த நிர்வாகிகள் மீது தாக்குதல் நடந்துள்ளது.

## ஆனைமங்கலம் செப்பேடுகளுக்கு புகழாரம் சூட்டிய பிரதமருக்கு நன்றி தெரிவித்த நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூன் 1

பிரதமர்நரேந்திரமோடி கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் மாதம் தோறும், மாதத்தின்கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் ‘மன் கி பாத்’ நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். அந்த வகையில், 134வது மன் கி பாத் நிகழ்ச்சியில் மோடி இன்று பேசினார்.

நெதர்லாந்தில் சோழர் கால செப்பேடுகள் மீட்கப்பட்டது பற்றி பேசிய மோடி, “ சோழ பேரரசின் முழுமையான வரலாறு, கலாசாரம் எண்ணி பெருமை கொள்கிறோம். விரைவில் நெதர்லாந்தில் இருந்து சோழர் கால செப்பேடுகள் கொண்டு வரப்பட உள்ளன. உலகம் முழுவதும் வாழும்தமிழர்களின்மனதில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சோழர்களின் கடல் சாம்ராஜ்ஜியம் எவ்வளவு வலிமையானது என்பதை அறிந்து வியந்தேன்.” என்றார்.

இது குறித்து தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் "மனதின் குரல்" நிகழ்ச்சி வாயிலாக நம் பாரத மக்களுடன் உரையாற்றும் நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, இன்றைய தினம் ஆனைமங்கலம் செப்பேடுகள் குறித்து உரையாற்றியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

சோழர் கால செப்பேடுகள் மீட்கப்பட்டிருப்பது நம் ஒட்டுமொத்த பாரத தேசத்திற்கே பெருமிதமானது என நம் பிரதமர் கூறியிருப்பது தமிழர்கள் ஒவ்வொருவருக்குமே நெகிழ்ச்சியான தருணம் என்பதை யாராலும் மறுக்க இயலாது. நெதர்லாந்தில் இருந்து ஆனைமங்கலம் செப்பேடுகளை மீட்டெடுத்த தோடு, உள்நாட்டிலும் அதன் பெருமையைத் தொடர்ந்து பறைசாற்றி வரும் நம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எத்தனை முறை நன்றி கூறினாலும் தகும்! நமது தமிழரின் வரலாற்றுப் பொக்கிஷமான ஆனைமங்கலம் செப்பேடுகள் குறித்து நம் பாரதப் பிரதமர் ஆற்றிய உரையை அனைவரும் கேட்பீர்! நமது பாரதப் பிரதமரைப் போலவே தமிழர் கலாசாரத்தைப் போற்றுவீர்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலூர் மாவட்டம்

# தாராபடவேட்டில் கெங்கையம்மன் ஆலய சிரசு ஊர்வலம்



வேலூர் ஜூன்01

வேலூர் மாநகரம் காட்பாடி தாராபடவேட்டில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுந்தரியம்மன் மற்றும் கெங்கையம்மன் ஆலய புஷ்ப பல்லக்கு திருவிழா, சிரசு ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக சுந்தரியம்மனுக்கு ஜலம் திரட்டும் விழா, பால்குடம், பொங்கலிடுதல் அபிஷேக அலங்காரமும் இரவு ஸ்ரீ சுந்தரியம்மன் புஷ்பபல்லக்குகோயிலிருந்துபுறப்பட்டு முத்தமிழ் நகர், பவானி நகர், நேரு தெரு, பாரதி நகர் விரிவு முதல் பாறைமேடு அருகில் வரை கரகாட்டம், தப்செட் மேளம், வாணவேடிக்கையுடன்திருவீதி உலா நடைபெற்றது. இதனையடுத்து மே 31 ஞாயிறன்று ஶ்ரீ கெங்கையம்மனுக்கு காப்பு கட்டுதல் சிரசு ஊர்வலம் துவங்கி பின்னர் சிறப்பு அபிஷேகம் பொங்கலிடுதல் மற்றும் பகல் திருவிழா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் அம்மனுக்கு தீபாராதனை செய்து அம்மன் அருளை பெற்று சென்றனர். மாலையில் மங்கள வாத்தியம், குருப்மேளம், டிஜே, கரகாட்டம் ஆகிய கலைநிகழ்ச்சிகளை அனைவரும் கண்டுகளித்தனர். விழா ஏற்பாடுகளை ஊர் பொது மக்கள், விழா குழுவினர் (ம) இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.




வேலூர் மாவட்ட ஆட்சியராக பி.எஸ்.லீலா அலெக்ஸ் மே 31 ஞாயிறன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.



# திருப்பூர்: இந்து முன்னேற்றக் கழக தலைவர் வழக்கறிஞர்.கோபிநாத் பேட்டி

திருப்பூர்: ஜூன் 01

இந்து மக்கள் அரசியலில் புறக்கணிக்கப்படுகிறார்கள் நடிகராக இருந்தபோதுவிஜய்என்றவர்இப்போது ஜோசப் விஜய் என்கிறார். அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை அதே போல் இந்து மத தொன்மையை பாதுகாக்க வேண்டும். மும்மொழி கொள்கை கண்டிப்பாக வேண்டும். வசதி படைத்தவர்கள் பணம் செலுத்தி பல மொழிகள் படிக்கிறார்கள் ஆனால் அரசு பள்ளி மாணவர்கள் இரண்டு மொழி தான் படிக்க வேண்டும் என்பது பராபட்சமானது. மோடியின் ஆளுமையால் இந்தியா முக்கிய இடத்தில் உள்ளது. பெரும் சித்தாந்தம் உருவாகி உள்ளது. இந்துக்கள் மட்டுமல்ல இந்திய மக்கள் மும்மொழி கற்க வேண்டும் என்கிறார். வடமாநிலம் சென்றால் இந்தி தெரியாமல் அவதி அடைவதாக உள்ளது. இந்தி வேண்டாம் என்பவர்கள் எப்படியோ நாசமா போங்க எனக்கு கவலை இல்லை. இஸ்லாமிய, கிருஸ்தவ வழிபாட்டு தலங்கள் அவர்களிடமே உள்ளது. ஆனால் இந்து கோவில்களுக்கு மட்டும் அறநிலையத்துறை உள்ளது. கடந்த ஆட்சியில் செய்த தவறுகளை கண்டறிந்து உடனடியாக சரி செய்ய வேண்டும் . அனைத்து இந்து மக்களும் நமக்கு நல்லது செய்பவய்களுக்கு வாக்களிக்க வேண்டும். இந்து முன்னேற்றக் கழகம் கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலும் துவக்குகிறோம். அர்ச்சகர்களுக்கு முறையான ஊதியம் கொடுத்தால் அவர்கள் பணம் பெற மாட்டார்கள். இந்தஅரசுபச்சைகுழந்தை சட்ட ஒழுங்கை பாதுகாக்க காவல்துறைக்குமுழுசுதந்திரம்கொடுக்க வேண்டும். தயார் வீட்டு பிள்ளை வைத்தே வளர்த்தால் அந்த வீடு வளராது.

## ஆதவ் அர்ஜூனா அறியாமையில் பேசுகிறார்

# ஒவ்வொரு கட்சியாக மாறி வந்த அரசியல் தற்குறி கட்சி மாறி சென்றவர்கள் அனைவரும் வெளிச்சத்தை தேடிச்சென்ற விட்டில் பூச்சிகள் போலத்தான்: திருப்பூரில் அதிமுக புறநகர் மாவட்ட செயலாளர் சிவசாமி பேட்டி



திருப்பூர்: ஜூன் 01

திருப்பூர் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளர் ஆக இருந்த உடுமலை ராதா கிருஷ்ணன்நீக்கப்பட்டு முன்னாள் எம்பி சிவசாமி தற்பொழுது மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். என்னைத் தொடர்ந்து அவர் கட்சி நிர்வாகிகளை சந்தித்து கட்சியை பலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அதன்படி திருப்பூர் ஆண்டிபாளையம் பகுதியில் நிர்வாகிகளை சந்தித்து பேசினார் இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் ஏதோ மாயையில் வாக்களித்து விட்டு மக்கள் ஆதங்கத்தில் உள்ளனர். நாளை தேர்தல் நடந்தாலும் தவெக தோற்கும். அதிமுக வெற்றி பெறும்.

ஒரு சிலர் சுயநலத்திற்காக சென்றதால் வேட்பாளர் தேர்வு தவறு என சொல்ல முடியாது. அதிக உறுப்பினர் கொண்ட இயக்கம் அதிமுக ஆதவ் அர்ஜூனா அறியாமையில் பேசி வருகிறார் .அவருக்கு என்ன அனுபவம் இருக்கிறது. சிறிது சிறிதாக வளர்ந்தவர்கள் நாங்கள். ஒவ்வொரு கட்சியாக தாவி சென்றவர் அவர்கள் அரசியல் தற்குறி. என விமர்சித்தார். மக்கள்ஏமாந்துவாக்களித்துவிட்டார்கள். சோசியல் மீடியா தாக்கத்தில் கவர்ச்சியில் ஏமாந்து விட்டனர். அடுத்த வீதி, வீடுகளில் வாக்கு கேட்டோம் . ஆனால் எங்கள் வீட்டு வாக்குகளை தக்கவைக்க தவறியது தான் எங்கள் தவறு. பொதுச் செயலாளர் தலைமையில் அதிமுக கட்டுக்கோப்பாக உள்ளது. தமிழ்நாட்டின் அனைத்து கட்சி தலைவர்களையும் விஜய் சந்தித்தார் ஆனால் எடப்பாடி யாரை சந்திக்கவில்லை ஒரு தரப்பை மட்டும் சந்திக்கிறார். இது ஏமாற்று வேலை.

அதிகாரிகளை கையாலும் திறன் இல்லாதது தான் சட்ட ஒழுங்கு சீர்கெட காரணம். திடீர் எம்எல்ஏ அமைச்சர் எனும் போது அதிகாரிகளிடம் எப்படி வேலை பெறுவது என துறையை ஆளும் திறன் இல்லை என்பதையே இது காட்டுகிறது. என தெரிவித்தார்.

## சுசீந்திரத்தில்

# கஞ்சா விற்ற 3 வாலிபர்கள் காவல்துறையினரால் கைது



சுசீந்திரம்.ஜீன்1

சுசீந்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தனிஷ் லியோன் நேற்று சொத்தவிளைகடற்கரை பகுதியில் ரோந்து பணி மேற்கொள்ளும்போது சந்தேகப்படும் படியாக பையோடு திரிந்த மூன்று வாலிபர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் ராஜாக்கமங்கலம் துறை சுனாமி காலணியை சார்ந்த கிராஸ் சாரதி 18 என்பவரும் தெற்கு சூரங்குடி வடலி காட்டு விளையைச் சார்ந்த நந்தகுமார் 20 என்பதும் தூத்துக்குடியைச் சார்ந்த தமிழரசு 19 என்பதும் இவர்கள் அதிக பண ஆசையில் கஞ்சா என்னும் போதை பொருளை பள்ளி மாணவர்களுக்கும் கூலி தொழிலாளர்களுக்கும் விற்பனை செய்வதற்காக வைத்திருந்தனர் இதில் கிராஸ் சாரதி 1.100 கிலோ கிராம் கஞ்சாவும் நந்தகுமார் 50 கிராம் கஞ்சாவும் தமிழரசு 50 கிராம் கஞ்சாவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது தெரிந்து கஞ்சாவையும் பறிமுதல் செய்து அவர்களை சுசிந்திரம் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு வழக்கு பதிவு செய்து நாகர்கோவில் சிறையில் அடைத்தனர்




## கலைஞர் கருணாநிதி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

தென்காசி,ஜூன்.1

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் (ஜூன் 3)பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சுரண்டை நகரம் கீழச்சுரண்டையில் அமைந்துள்ள கலைஞர் நினைவாலயத்தில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலைஞரின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் மாதம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள், பொதுநலப் பணிகள் மற்றும் கழக நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்காக அயராது உழைத்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்களுக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவனுக்கு கருப்புசிவப்பு மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு வேட்டி அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் செல்லத்துரை, தெற்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் கனிமொழி மற்றும்

மாவட்டத் துணைச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமான கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசு மணல் குவாரிகளை திறக்க வேண்டும்

## மணல் லாரி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை



சேலம், ஜூன் 1

தமிழக அரசு மணல் குவாரிகளை உடனடியாக திறக்கவேண்டும் என மணல் லாரி உரிமையாளர்கள் சங்க செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினர்.

சேலம் மாவட்ட ஒருங்கிணைந்த மணல் லாரி உரிமையாளர்கள் நலச் சங்க மாவட்ட செயற்குழு கூட்டம் குரங்குச்சாவடியில் உள்ள மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட செயாளர் கண்ணையன் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் சந்திரன், மாவட்ட துணை செயலாளர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணைத் தலைவர் பழனிசாமி கோரிக்கைகளை விளக்கி பேசினார். மாவட்ட தலைமை நிலைய செயலாளர் மாரியப்பன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் முதல் தீர்மானமாக, தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் அவருடன் பதிவியேற்றுள்ள அனைத்து அமைச்சர்களுக்கும் வாழ்த்து தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றினர். பின்னர், எம் சாண்ட், பி சாண்ட், முக்கால் ஜல்லி, சிப்ஸ் ஏற்றிவரும் லாரி, லாரி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மீது வழக்கு போடுவதை கனிமவளத்துறை அமைச்சர் தடுத்து நிறுத்த வேண்டும். கடந்தாண்டு கர்நாடகாவில் பெய்த கனமழை காரணமாக மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட நீரின் மூலமாக, காவேரி படுகையில் ஆங்காங்கே மணல் தேங்கி உள்ளது. எனவே மணல் லாரி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், கட்டிட பணியாளர்கள், செங்கல் சூளை பணியாளர்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் மணல் குவாரிகளை உடனடியாக திறக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

# திருக்கண்ணபுரம் சவுரிராஜ பெருமாள் கோவில் தேரோட்டம் ; திரளான பக்தர்கள் பங்கேற்பு



நாகை, ஜூன் 1

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருக்கண்ணபுரத்தில் சவுரிராஜபெருமாள் கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் வைணவ தலங்களில் திவ்ய தேசம் என்று அழைக்கப்படும் 108 திருத்தலங்களில் 17வது தலமாக போற்றப்படுகிறது. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பெருமையுடைய இந்த கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் பிரம்மோற்சவ விழா நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு பிரம்மோற்சவ விழா கடந்த 23ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழா நாட்களில் பல்வேறு வாகனங்களில் பெருமாள் வீதி உலா, தங்க கருட சேவை, வெள்ளை சாத்தி புறப்பாடு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சௌரிராஜ பெருமாள், பத்மினி தாயார் திருக்கல்யாண உற்சவம் நேற்று முதல் நாள் இரவு நடைபெற்றது. தொடர்ந்து நேற்று பெருமாள் உபநாச்சியார்கள் நால்வருடன் திருத்தேரில் எழுந்தருளி தேரோட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து தேரை வடம் பிடித்து இழுத்தனர். விழாவை யொட்டி, வருகிற 3ஆம் தேதி வெள்ளி ரத புறப்பாடும், 4ஆம் தேதி விடையாற்றியும் நடைபெறுகிறது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோவில் தக்கார் மணிகண்டன், செயல் அலுவலர் புவியரசு, கணக்கர் உமா மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



## திருவட்டாறு

# ஸ்ரீதர்மசாஸ்தா கோவில் மகா கும்பாபிஷேகம் நடந்தது

திருவட்டாறு, ஜுன்.1

திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோவிலைச் சுற்றி 12 காவுக்கோவில்கள் உள்ளன. இந்த கோவில்களில் ஒன்றான காங்கரைஸ்ரீராமன்கோணம்தர்மசாஸ்தா ஆலயம் தற்போது அழகுற புதுப்பிக்கப்பட்டுள்ளது. மூலவராக ஐயப்பசுவாமி இங்கு காட்சி தருகிறார். உப தெய்வங்களாக் கணபதி, வெண்ணெய் கிருஷ்ணர், நாகர், புவனேஷ்வரி, ஸ்ரீராம சீதா லெஷ்மண அனுமான் சன்னதிகள் உள்ளன.

இக்கோவில் கும்பாபிஷேக விழா கடந்த 28.ம் தேதி கணபதி ஹோமத்துடன்துவங்கியது. நேற்று 31ம் தேதி கணபதி ஹோமத்தை தொடர்ந்து பிரதிஷ்டை நடந்தது. பின்னர் வேதமந்திரம் ஒலிக்க, மேளதாளம் முழங்க ஏற்றக்கோடு மடம் மதுசூதனர் நம்பூதிரி தலைமையில் திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோவில் தந்திரி கோகுல் நாராயணரு மகா கும்பாபிஷேகத்தை நடத்தினார்.

புலவர் கு. ரவீந்திரன் நேர்முக வர்ணனை வழங்கினார். கும்பாபிஷேகத்தின்போது வானில் கருடன் வட்டமிட்டது. . கும்பாபிஷேகத்தைத்தொடர்ந்து ஐயப்ப சுவாமிக்கு சிறப்பு அலங்காரம், தீபாராதனை நடந்தது. தொடர்ந்து பக்திபஜனை, நடந்தது.

விழா ஏற்பாடுகளை கோவில் தலைவர் ஜி. சிவ சஜூ, செயலர் ஆர். சுனில், பொருளாளர் எம். பிரவீன், துணைத்தலைவர் மணிகண்டன், துணைச்செயலாளர் ஜெகன், துணை பொருளாளர் எஸ்.பி. அக்ஷய் மற்றும் உறுப்பினர்கள், பக்தர்கள் செய்திருந்தனர்.

சுதந்திரப் போராட்ட வீரர் வீரன் வெள்ளையத்தேவனின் 257வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



தூத்துக்குடி, ஜூன் 1

சுதந்திரப் போராட்ட வீரர் வீரன் வெள்ளையத்தேவனின் 257வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தாலுகா உள்பட்ட வல்லநாட்டியில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர்ஶ்ரீநாத் ,குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் பெ.மதன்ராஜா, மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன், திருவைகுண்டம் சட்ட மன்ற உறுப்பினர் கு.சரவணன் ஆகியோர் கள், மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

சுதந்திரப் போராட்ட வரலாற்றில் முக்கியப் பங்கு வகித்த மாவீரன் வீரன் வெள்ளையத்தேவனின் 257வது பிறந்தநாள் விழா இன்று அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, வல்லநாடு மணிமண்டபத்தில் அமைந்துள்ள வெள்ளையத்தேவனின் திருவுருவச் சிலைக்குப் தமிழக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஶ்ரீநாத்,

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் பெ.மதன்ராஜா, மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன்மற்றும்திருவைகுண்டம்சட்டமன்ற உறுப்பினர்கு.சரவணன் ஆகியோர் அன்னாரது திருவுருவக் சிலைக்குப் மாலை அணிவித்து பூக்களைத் தூவி, மரியாதையைச் செலுத்தினார்.

இவ்விழாவில் தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் மி.பிரபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சே.ரா.நவீன் பாண்டியன், ஶ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் தாஹிர் அஹமது , மாவீரன் வீரன் வெள்ளையத்தேவனின் வாரிசுதாரர்கள் அ.மாரிமத்து, பல்வேறு அரசுத் துறை சார்ந்த அதிகாரிகள், முக்கியப் பிரமுகர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் உட்படப் பலரும் விழாவில் திரளாகக் கலந்துகொண்டனர்.

3வது திருமணத்திற்கு எதிர்ப்பு:

# 2 மனைவிகளை தாக்கி சிறை வைப்பு: கணவர் மீது வழக்கு

நாகர்கோவில், ஜுன்.1

ஈத்தாமொழி அருகே உள்ள மங்காவிளையை சேர்ந்தவர் செல்வகுமார் (42). தேங்காய் வெட்டும் தொழிலாளி. இவருக்கு முதலில் இசக்கியம்மாள் (35) என்பவருடன் திருமணம் நடந்தது. பின்னர் அவரின் தங்கை நந்தினி (30) என்பவரையும் செல்வகுமார் 2ம் திருமணம் செய்து கொண்டார். தற்போது ராதாபுரத்தை சேர்ந்த பெண் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அவரையும் 3ம் திருமணம் செய்ய திட்டமிட்டுள்ளார். இதற்கு இசக்கியம்மாள், நந்தினி எதிர்ப்பு தெரிவித்து தகராறு செய்து வந்தனர்.

இந்த நிலையில் சம்பவ தினம் இது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் இரண்டு மனைவிகளையும் செல்வகுமார் சரமாரியாக தாக்கி உள்ளார். பின்னர் மாவாட்டும் கல்லை எடுத்து 2வது மனைவி நந்தினி மீது வீசியதில் அவரது இடது காலில் காயம் ஏற்பட்டது. ஆனால் மருத்துவ சிகிச்சை செல்ல விடாமல் தடுத்து வீட்டில் அடைத்து வைத்துள்ளார். போலீசில் கூறினால் கொலை செய்து விடுவேன் என்றும் மிரட்டி உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நந்தினிக்கு காலில் ஏற்பட்ட காயம் அதிகரித்து வேதனையில் துடித்தார். இதை எடுத்து இசக்கியம்மாள் கணவருக்கு தெரியாமல் நந்தினியை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு நடந்த சம்பவத்தை கூறியதில், ஈத்தாமொழி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் விசாரணை நடத்தி செல்வகுமார் மீது வழக்கு பதிவு செய்து, தலை மறைவான அவரை தேடி வருகிறார்கள்.

# மேகதாது பகுதியை முற்றுகையிட தஞ்சாவூரில் இருந்து விவசாயிகள் பயணம்



தஞ்சாவூர் ஜூன் 1

மேகதாது பகுதியில் அணைக் கட்டும் முயற்சியை கண்டித்து முற்றுகை போராட்டம் நடத்துவதற் காக தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தினர் பி ஆர் பாண்டியன் தலைமையில் தஞ்சாவூர்யில் இருந்து 20க்கும் மேற்பட்ட வாகனங்களில் புறப்பட்டு சென்றனர்

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது பகுதியில் கர்நாடக அரசு அணைக்கட்டி அங்கு உள்ள நீரை தங்களது மாநில பாசன தேவைக ளுக்காக பயன்படுத்த திட்டமிட்டு ள்ளது .இதனால் தமிழகத்திற்கு வரவேண்டிய காவிரி நீர் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் மேகதாது பகுதியில் அணைக்கட்டும் திட்டத்தை கைவிட வேண்டும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய மாதாந்திர நீர் பங்கீடு கர்நாடக அரசு முறையாக வழங்க வேண்டும், மேலும் இரு மாநில விவசாயிகளி ன் நலன் கருதி கருத்தில் கொண்டு ராசி மணல் பகுதியில் அணை கட்ட அனுமதி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ,மேகதாது பகுதியில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்த தமிழக காவிரி விவசாய சங்கங்கள் முடிவு செய்தது அதன்படி தமிழக விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி ஆர் பாண்டியன் தலைமையில் தஞ்சாவூர் பெரிய கோவில் முன்பு அமைந்துள்ள மாமன்னன் ராஜராஜசோழன் சிலைக்கு மாலை அணிவித்து அங்கிருந்து வாகன பேரணி தொடங்கியது .இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் தலைவர் திருப்பதி ,துணைத்தலைவர் கிருஷ்ண மணி ,துணை செயலா ளர் சுவாமிநாதன் மற்றும் மாவட்ட தலைவர்கள் ,செயலாளர்கள் என மொத்தம் 20 க்கும் மேற்பட்ட வாகனங்களில் புறப்பட்டு சென்றனர்

திருச்சி நாமக்கல் சேலம் தர்மபுரி வழியாக ஓசூர் சென்று அங்கிரு ந்து மேகதாது பதவிக்கு முற்றுகை போராட்டம் நடத்த உள்ளனர்

முன்னதாக பேரணியை தொடங் கும் போது பி ஆர் பாண்டியன் நிருபர்களிடம் கூறியதாவது

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பில் கீழ் பாசன விவசாயிகளை பாதிக்கும் வகையில், கர்நாடக அரசு புதிய அணைகளை கட்டக்கூடாது என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது .இந்த தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் உறுதி செய்துள்ளது. இந்த சூழலில் மேகதாது அணை திட்டத்திற்கான பணிகளை விரைவுபடுத்தி பூமி பூஜை நடத்த உள்ளதாக கர்நாடக துணை முதல் மந்திரி சிவக்குமார் அறிவித்திருப்பது சட்டவிரோத மானது, இது நீதிமன்ற அவமதிப்பு க்கு உரிய செயலாகும் .எனவே தமிழக அரசு இது தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்


மேகதாது அணை திட்டத்தை கைவிட வேண்டும். அதே நேரத்தில் ராசி மணல் பகுதியில் தமிழக அணைக்கட்டஅனுமதி வழங்க வேண்டும். அங்கு அணை கட்டப்பட்டால் இரு மாநில விவசாயிகளுக்கும் பயன் அளிக்கும். இவ்வாறுஅவர் கூறினார்



கைத்தறி துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் விஜய் பாலாஜியை ஈரோடு ஆதிபராசக்தி குருபீட தலைவர் நட்ராஜ் தலைமையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து மேல்மருவத்தூர் அம்மா அருள் பிரசாதத்தை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். குருபீட நிர்வாகிகள் உடன் இருந்தனர்

தஞ்சாவூர் மாவட்டத்தில்

# நீர் நிலைகள் தூய்மைப்படுத்தும் இயக்கம் தொடக்கம்



தஞ்சாவூர் ஜூன் 1

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் நீர் நிலைகளைதூய்மைப் படுத்தும் சவால் என்கின்ற தூய்மை இயக்கம் தொடங்கியது

தஞ்சாவூர் பெரிய கோவில் அருகே உள்ள கல்லணை கால் வாயில் இந்த இயக்கத்தை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார்

பின்னர் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தெரிவித்த தாவது

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள குளங்கள், ஏரிகள், ஆறுகள், கால்வாய்கள், நீர் வழி தடங்கள், கடல் கரை பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு நீர் நிலைகளில் தேங்கியுள்ள நெகிழி கழிவுகள் குப்பை களை அகற்றி நீர் நிலைகளின் இயற்கை சூழல் மீட்டெடுப்பதே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம்

இதன் அடிப்படையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் உள்ள நீர் நிலைகளில் உள்ளாட்சி அமைப்புக ள் தன்னார்வ அமைப்புகள், பொது மக்கள் இணைந்து தூய்மை பணி களை மேற்கொண்டு வருகின்றனர் தஞ்சாவூர் கல்லணை கால்வாயில் நடைபெற்ற தூய்மை பணியில் மாநகராட்சி, பேரூராட்சி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளை சேர்ந்த 500க்கும் அதிகமான தூய்மை பணியாளர்கள் பங்கேற்று தூய்மை பணிகளை மேற்கொண்டனர் நீர்நிலைகளில் நெகிழி பொருள் கள் மற்றும் குப்பைகளை கொட்டு வதை பொதுமக்கள் முழுமையாக தவிர்க்க வேண்டும் .பெரிய கோவி ல் அருகே உள்ள கல்லணை கால்வாயில் குளித்துவிட்டு துணிகள் மற்றும் பிற கழிவுகளை வீசுவதை முற்றிலும் நிறுத்த வேண்டும். மேலும் நீர் நிலைகளை பாதுகாப் பது அனைவரின் பொறுப்பு, தூய்மையான மற்றும் நிலையான சுற்றுச்சூழலை உருவாக்க பொது மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார் கலெக்டர்

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் விஜய் சரவணன், மாநகராட்சி ஆணையர் கண்ணன், மாவட்ட சுற்றுலா அலுவலர் வரதராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுக நிர்வாகிகள் தவெகவில் இணைந்தனர்



திருப்பூர் ஜூன் 01

அஇஅதிமுக நல்லூர் பகுதி கலை பிரிவு செயலாளர் சுதாகரன் தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் கேபிஜி மகேஷ்ராம் மற்றும் எஸ்.பி. மணி அவர்களின் ஏற்பாட்டில் மாநகர் மாவட்ட செயலாளர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான பாலமுருகன் தலைமையில் இணைந்த நிர்வாகிகள் பகுதி அண்ணா தொழிற்சங்க துணை செயலாளர் மணிகுமார்.பகுதி கலைபிரிவு இணை செயலாளர் ரகுபதி.மகளிர் அணி துணை தலைவர் தேன்மொழி.பகுதி மகளிர் அணி இணை செயலாளர் கண்ணகி. பகுதி விவசாய அணி இணை செயலாளர் ராமசாமி.மீனவர் அணி இணை செயலாளர் குமார்.பகுதி அமைப்பு சாரா ஓட்டுநர் அணி பொருளாளர் செந்தில்குமார்.பாசறை துணை செயலாளர்ரமணிஉள்ளிட்டநிர்வாகிகள் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்..



தேனி மாவட்டத்திற்கு வருகைதந்த தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ச.கீர்த்தனா மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.

# லால்குடி: குடிபோதையில் வீட்டை கொளுத்திய மகன்



திருச்சி, ஜூன் 1

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே நன்னிமங்கலம் கிராமத்தில் சகாதேவன் என்பவரது மகன் மாதவன், குடிபோதையில் தனது வீட்டிற்கு தீ வைத்தார். இந்த தீ விபத்தில் பள்ளி, கல்லூரி சான்றிதழ்கள் மற்றும் அரசு ஆவணங்கள் முற்றிலும் எரிந்து நாசமாயின. தகவல்அறிந்த லால்குடி தீயணைப்பு நிலைய அலுவலர் பிரபு தலைமையிலான வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்தசம்பவம்அப்பகுதியில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# குன்னூரில் பெட்ரோல் டீசல் தட்டுப்பாடு பங்குகளில் குவியும் வாகனங்கள்



குன்னூர், ஜூன் 1

நீலகிரி மாவட்டம் குன்னூரில் கோடை விழா நிறைவடைந்த நிலையில் இம்மாவட்டத்திற்கு மாவட்டத்திற்கு வந்த பெரும்பாலான சுற்றுலா பயணிகள் தங்களது சொந்த ஊருக்கு திரும்பிச் செல்கின்றனர். இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் விலை உயர்ந்து வருவதால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதில் நேற்று மாலையிலிருந்து குன்னூர் பாலவாசி மற்றும் மவுண்ட் ரோடு பெட்ரோல் பங்குகள் இருப்பு முடிந்ததால் மூடப்பட்டது . இதன் காரணமாக சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் வாசிகள் பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் டீசல் தட்டுப்பாடு ஏற்றுள்ளதாக கிடைத்த பரவலான தகவலை வைத்து ஊட்டி சாலையில் உள்ள பெட்ரோல் பங்கில் ,வாகன ஓட்டிகள் குவிந்தனர். மேலும் பாட்டில் மற்றும் கேன்களில் பெட்ரோலை நிரப்ப வாகன ஓட்டுனர்கள் காத்திருந்து வாங்கி சென்றனர். திடீர் தட்டுப்பாடு காரணமாக வாகன ஓட்டிகள் பெரும் அவதிக் குள்ளாகினர்.

திருப்பத்தூரில் ஜெயந்தி பேஃஷன் & பியூட்டி இன்ஸ்டிட்யூட் சார்பில்

# சிறு குறு தொழில்முனைவர் பெண்களுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சி



திருப்பத்தூர், ஜூன் 1

திருப்பத்தூரில் அமைந்துள்ள, ஜெயந்தி பேஃஷன் & பியூட்டி இன்ஸ்டிட்யூட் சார்பில் , திருப்பத்தூரை சேர்ந்த சிறு குறு தொழில்முனைவர் பெண்களை கௌரவிக்கும் வகையில் பிரம்மாண்டமான வீர மங்கையர் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை பேஃஷன் & பியூட்டி இன்ஸ்டிட்யூட் நிறுவனர், திருமதி N.ஜெயந்திM.பெருமாள்B.S.மெட்ரோ மூர்த்திSPS.வடிவேல்திருமதி தேன்மொழி வெங்கடேசன் ஆகியோர் ஒருங்கிணைத்து சிறப்பாக விழாவை நடத்தினார்கள்இந்த விருது விழாவில் தொழில் முனைவோர்

மேம்பாட்டு அமைப்பகத்தின் நிறுவனர் திருமதி M.மகேஸ்வரி மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு தையல்களை தொழிலாளர்கள்மு ன்னேற்ற சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர்ஐ யா லவ்லி பாலகிருஷ்ணன்மாநிலதுணைத்தலைவர்A.தங்கமணி மாநில துணைச் செயலாளர் பொய்கை சேகர்ம ற்றும் திருப்பத்தூர் மாவட்ட அனைத்து நிர்வாகிகளும்ம ற்றும் திருப்பத்தூர் நகரம் ஆலங்காயம் கிளை நாட்றம்பள்ளி கிளை மாதனூர் கிளை கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் 100 க்கும் மேற்பட்ட சாதனைப் பெண்களுக்கு வீரமங்கை விருது,கேடயம் ,பதக்கம்,மற்றும் அவர்களின் தொழில்,சாதனைகளுக்கான அங்கீகாரங்கள் வழங்கினர், விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் விழா ஏற்பாட்டாளர் N.ஜெயந்தி அவர்கள் நன்றிகளை தெரிவித்தார்கள்



### ரோட்டரி இயக்கம் சார்பில்

# கிராமங்களை தத்தெடுத்து கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு இலவச கழிப்பறை வசதி: ஆளுநர் பேட்டி

நாகர்கோவில், ஜுன்01

ரோட்டரி இயக்கம் சார்பில் கிராமங்களை தத்தெடுத்து கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு இலவச கழிப்பறை அமைத்து கொடுக்க ஏற்பாடு மாவட்ட ஆளுநர்காந்திகிருஷ்ணன்நிருபர்களுக்கு பேட்டியளித்தார்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், ரோட்டரி இயக்கத்தைச் சேர்ந்த 23 ரோட்டேரியன்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ரோட்டரி உலகிற்கு மிகுந்த பெருமையளிக்கிறது. மொத்த உறுப்பினர்களில் சுமார் 10 சதவீதம் ரோட்டேரியன்கள் இடம்பெற்றிருப்பது, சமூக சேவையில் ஈடுபட்டவர்களின் மீது மக்களிடம் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, ரோட்டரி மாவட்டம் 3212ஐச் சேர்ந்த மூன்று ரோட்டேரியன்கள்சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

அவர்களைப் பாராட்டும் வகையில், வருகிற ஜூன் 6ஆம் தேதி திருச்சிரா ப் பள்ளியில் மிகப் பிரம்மாண்டமான பாராட்டு விழாவை தமிழகத்தில் உள்ள அனைத்து சங்கங்களும் சேர்ந்து ரோட்டரி சார்பில் நடத்த உள்ளோம். இதில் மாநிலம் முழுவதிலுமிருந்து ரோட்டேரியன்களும், சமூக ஆர்வலர்களும் பங்கேற்க உள்ளனர்.

மேலும், இன்று எங்கள் மாவட்டத்தின் எதிர்கால தலைவர்களை உருவாக்கும் நோக்கில் "கிளப் லீடர்ஷிப் லேர்னிங் செமினார்" நடைபெற்று வருகிறது. இதில் 125 ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று, சிறந்த தலைமைத்துவம், உறுப்பினர் வளர்ச்சி, சேவைத் திட்டங்கள் மற்றும் ரோட்டரியின் நோக்கங்களை திறம்பட செயல்படுத்துவது குறித்து பயிற்சி பெற்று வருகின்றனர். இது வரவிருக்கும் ரோட்டரி ஆண்டிற்கான வலுவான அடித்தளமாக அமையும்.

ஜூலை 1ஆம் தேதி முதல் ரோட்டரி மாவட்டம் 3212ன் மாவட்ட ஆளுநராக நான் பொறுப்பேற்க உள்ளேன். சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஏழு வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கியது. இந்தப் பகுதிகளில் 125 ரோட்டரி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எனது ஆளுநர் ஆண்டிற்கான மிக முக்கியமான திட்டமாக Serving the Roots என்ற திட்டத்தை அறிவிக்கிறோம். இந்தத் திட்டத்தின் கீழ், எங்கள் 125 ரோட்டரி சங்கங்களும்125பின்தங்கியகிராமங்களைத் தத்தெடுத்து, அவற்றின் முழுமையான வளர்ச்சிக்காக செயல்பட உள்ளது என அவர் தெரிவித்தார்.

கழிப்பறை வசதி இல்லாத வீடுகளுக்கு தனிநபர் கழிப்பறைகள் அமைத்தல்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல்.

இளம் விதவைகள், குடும்பத்தை நடத்தப் போராடும்பெண்கள்மற்றும்வேலை வாய்ப்பு தேவைப்படும் பெண்களுக்கு "பிங்க் ஆட்டோ" வழங்கி சுயதொழில் வாய்ப்பை உருவாக்குதல்.

குடிநீர், கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான பல்வேறு சேவைத் திட்டங்களை செயல்படுத்துதல்.

இந்த அனைத்து திட்டங்களும் ரோட்டேரியன்களின் பங்களிப்பு, நன்கொடையாளர்கள், தொழில்நிறுவனங்களின் CSR நிதி மற்றும் சமூக ஆர்வலர்களின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும். ரோட்டரி என்பது வெறும் அமைப்பு அல்ல; அது மனிதநேய சேவையின் இயக்கம். அரசாங்கத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு துணையாக, சமூகத்தின் கடைசி மனிதரையும் சென்றடையும் வகையில் எங்கள் சேவைகளை மேற்கொள்ள உறுதிபூண்டுள்ளோம். சேவை செய்யும் கரங்கள், பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட உயர்ந்தவை" என்ற ரோட்டரியின் தத்துவத்தை முன்னிறுத்தி, மக்களின் வாழ்க்கையில் நிலையான மாற்றத்தை உருவாக்க நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம் என அவர் தெரிவித்தார். இதில் மாவட்ட ஆளுநர் காந்தி கிருஷ்ணன், சேர்மன் கர்பூர், செயலாளர் செல்வம், மாவட்ட செயலாளர் நந்து, துணை ஆளுநர் சிவகுமார்ராஜாமற்றும்ஏராளமானநிர்வாகிகள் கலந்து க்கொண்டனர்.



### திருச்செந்தூர் கோவில் வளாகத்தில்

# புதிதாக அமைக்கப்பட்ட புறக்காவல் நிலையம்: மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரிப்பன் வெட்டி திறந்த வைத்தார்

திருச்செந்தூர், ஜூன் 1

திருச்செந்தூர் கோவில் வாளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புறக்காவல் நிலையத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா நேற்று ரிப்பன் வெட்டி திறந்த வைத்தார்;

திருச்செந்தூர்அருள்மிகுசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வளாகப் பகுதியில் காவல்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சார்பாக புதிதாக அமைக்கப்பட்ட புறக்காவல் நிலையத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா நேற்று ரிப்பன் வெட்டி குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார்.

பின்னர் புறக்காவல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள CCTV கேமராக்களின் கண்காணிப்பு திரையை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வின்போது காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் ஆறுமுகம், தீபு, காவல் துணை கண்காணிப்பாளர்கள் செல்வராஜ், குரு வெங்கட்ராஜ் உட்பட காவல்துறை அதிகாரிகள் மற்றும் கோவில் இணை ஆணையர் ராமு ஆகியோர் உடனிருந்தனர்.

# குத்தாலத்தில் தவெக சார்பில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு அன்னதான வழங்கப்பட்டது




தென்காச், ஜூன் 1

உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தளபதி முதலமைச்சர் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க திரு என். ஆனந்த் பொதுச்செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் சி எஸ் குட்டி கோபிநாத் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு குத்தாலம் பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது .இந்நிகழ்ச்சியில் குத்தாலம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் திரு ராஜ்குமார் , ஹரிஷ் , சதீஷ்குமார் மற்றும் ஸ்டாலின் குத்தாலம் மத்திய ஒன்றிய இணைச் செயலாளர் திரு. கார்த்திக் மற்றும் பேரூர் கழகம் செயலாளர் சூர்யா மற்றும் தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### நாகப்பட்டினம் மாவட்டம் யாட் கிளப் சார்பில்

# பள்ளி மாணவர்களுக்கு பாய்மரப்படகுப் பயிற்சி அறிமுக நிகழ்ச்சி




நாகப்பட்டினம், ஜூன் 1

நாகப்பட்டினம் மாவட்டம் யாட் கிளப் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு பாய்மரப்படகுப் பயிற்சி அறிமுக நிகழ்ச்சி நடைபெற உள்ளது எனவே ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகாஷ் தெரிவித்துள்ளார்

நாகப்பட்டினம் யாட் கிளப் சார்பில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு குறித்து விளக்க மற்றும் அறிமுக நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் சேலிங் விளையாட்டு என்றால் என்ன, அது எப்படி நடைபெறும், இதில் கலந்து கொள்வதால் மாணவர்களுக்கு கிடைக்கும் பயன்கள், தன்னம்பிக்கை வளர்ச்சி, உடல் மற்றும் மன திறன் மேம்பாடு போன்ற விஷயங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்படும்.

இந்த பயிற்சியில் ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வரும் திங்கட்கிழமை (01.06.2026) மதியம் 2.00 மணிக்கு நாகப்பட்டினம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் ஆதார் அட்டை நகல் (யுயனாயச ஊயசன ஒந சழஒ), பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஆகிய ஆவணங்களை கொண்டு வர வேண்டும், மேலும் தகவல்களுக்கு நாகப்பட்டினம் யாட் கிளப்பை தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

### குன்னூர் அருகே

# குடி நீர் குழாய்களை உடைத்து தண்ணீர் குடிக்கும் காட்டு யானைகள்



குன்னூர், ஜூன் 1

மலை மாவட்டமான நீலகிரியில் கடந்த சில மாதங்களாக கோடை வெயில் இருந்து தப்பிக்கவும் தண்ணீர் மற்றும் இறை தேடி சமவெளி பகுதியில் இருந்து வன விலங்குகள் இடம் பெயர்ந்து வருவது வாடிக்கையாக உள்ளது.இதில் குறிப்பாக காட்டு யானைகள் மேட்டுப்பாளையம், காரமடை, சிறுமுகை, பில்லூர் உள்ளிட்ட பகுதியில் இருந்து இடப்பெயர்ந்து மலைப்பாதை மற்றும் மலை கிராமங்களில் சுற்றி திரிகிறது.இதில் ஒரு பகுதியாக குன்னூர் அருகே உள்ள உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட ஆணை பள்ளம் பகுதியில் நடமாடி வரும் காட்டு யானைகள் தேவையான குடிகள் கிடைக்காததால் அங்குள்ள குடிநீர் குழாய்களை உடைத்து தண்ணீரை குடித்து முகாமிட்டுள்ளது.இதனால் இப்பகுதியில் உள்ள பழங்குடியின மக்கள் குடிநீரின்றி தவித்து வருவதுடன், வீட்டை விட்டு வெளியே வர இயலாமல் அச்சத்தில் உள்ளனர். தொடர்ந்து இரவு நேரத்தில் யானைகள் நடமாட்டம் இருப்பதால் வனத்துறை ஊழியர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் குடிநீரின்றி தவித்து வரும் மக்களுக்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் பாதுகாப்பான முறையில் குடியிருப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பழங்குடியின மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### குமரி மாவட்ட புதிய கலெக்டராக மு.பிரதாப் பெறுப்பேற்றார்

# மாவட்ட நலன் சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்: நிருபர்களிடம் பேட்டி



நாகர்கோவில், ஜுன்.1

குமரி மாவட்டத்தின் 54வது கலெக்டராக பிரதாப் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். நாகர்கோவிலில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் நிருபர்களுக்கு பேட்டியளித்து கூறியதாவது:

தமிழ்நாட்டின் கடைகோடி மாவட்டமான கன்னியாகுமரி இயற்கையில் எழில் சூழ்ந்த மாவட்டமாகும். இங்கு கலெக்டராக பொறுப்பேற்றதில்மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் இந்த வாய்ப்பை வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் மக்கள் படிப்பறிவில் மிகவும் முன்னேறியவர்கள். கலெக்டர் அலுவலகம் முதல் எந்த அலுவலகத்திற்கு பொது மக்கள் வந்தாலும் அவர்கள் கண்ணியமான நடத்தப்பட வேண்டும். அவர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றும் அளவில் மாவட்ட நிர்வாகம் செயல்பட வேண்டும். மேலும் குமரி மாவட்டத்தின் சுற்றுலா தலங்கள் அதிமாக உள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா பயணிகள் அதிகமாக வரும் மாவட்டம் என்பதால் சுற்றுலா பயணிகளுக்கு நல்ல அனுபவம் தரும் வகையில் சுற்றுலா தலங்களை மேம்படுத்தும் அந்த வகையில் துறைச்சார்ந்த அலுவலகர்களுடன் கலந்து பேசி முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் மீனவர்கள் அதிகம் கொண்ட மாவட்டம் என்பதால் அவர்கள் சார்ந்த கோரிக்கைகள் மற்றும் வாழ்வாதாரம் சார்ந்த நல்ல திட்டங்களை அவர்களுடன் ஒருங்கிணைந்து அரசுக்கு பரிந்துரை செய்து அவர்கள் தேவைகள் நிறைவேற்றி கொடுக்கப்படும். விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் மற்றும் பல்வேறு தொழில் சார்ந்த பணிகள் செய்யும் மக்களின் தேவைகளும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அரசுக்கு தெரியப்படுத்தி நிறைவேற்றப்படும். மாவட்டத்தின் முக்கிய கட்டமைப்பு பணிகளான சாலைகள் மேம்பாலங்கள்போன்ற பணிகள் ஆய்வு செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும்.

இதேபோல், விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் பல்வேறு தொழில் சார்ந்த பணிகளைச் செய்யும் அனைத்து மக்களின் கோரிக்கைகளையும் நம்முடைய மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அரசுக்குப் பரிந்துரை செய்து, அந்தப் பணிகளும் விரைவாக நிறைவேற்றப்படும்.

குமரி மாவட்டத்தின் சுற்றுலாத்துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் இங்குள்ள பொதுமக்கள் அனைவரின் கோரிக்கைகளையும் கேட்டு, அதற்கேற்பப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஏனெனில், பணிகளை முன்னெடுப்பது என் தனிப்பட்ட நோக்கம் மட்டுமல்ல. மாவட்டத்தில் உள்ள மக்கள் மற்றும் அனைத்துப் பிரதிநிதிகளும் இணைந்து எந்தெந்தப் பணிகளை முன்னிறுத்தச் சொல்கிறார்களோ, அதற்கேற்ப இந்த மாவட்ட நிர்வாகம் சிறப்பாகச் செயல்படும். உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடு, தமிழ்நாடு அளவில் கன்னியாகுமரிமாவட்டம்அனைத்துத்துறைகளிலும் மிகவும் வளர்ச்சி அடைந்த மாவட்டமாகத் திகழவும்,

மேலும் சிறந்த பல வளர்ச்சிகளைப் பெற்று முதன்மை இடத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடும் நம் மாவட்ட நிர்வாகம் செயல்படும். மாவட்ட நிர்வாகம் முன்னெடுக்கும் பணிகளுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என கூறினார். நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.பூங்கோதை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கு.சுகிதா, ஊரக வளரச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ். காளீஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டக்குழு சார்பில்

# மத்திய அரசு ரசாயன உர விலை உயர்வை திரும்ப பெற வேண்டும்: மாவட்டச் செயலாளர் அறிக்கை

தருமபுரி ஜூன் 01

தருமபுரி மாவட்ட ஐக்கிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தருமபுரி மாவட்ட குழு சார்பில் விவசாயிகளை பாதிக்கும் ஒன்றிய பாஜக அரசின் ரசாயன உர விலை உயர்வை திரும்பப்பெற வேண்டும் என்று இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது. இது குறித்து அக்கட்சியின் தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ பிரதாபன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

இந்திய விவசாயிகள் ரசாயன உரம் இன்றி அதிக மகசூல் பெற முடியாத நிலையில் உர விலையை மத்திய அரசு கடுமையாக உயர்த்தியுள்ளதால் பெரும் பாதிப்படையும் விவசாயத்துறை ஏற்கனவே பெட்ரோல், டீசல்,சமையல் எரிவாயு விலை உயர்வு இதனை தாங்கி கொள்ளதா நிலையில் இருந்து வரும் நிலையில் உர விலை உயர்வு, அனைத்து பயிர்களுக்கும் அடி உரமாக பயன்படுத்தும் காம்ப்ளக்ஸ் 40 கிலோ மூட்டை ரூ. 660 விலை உயர்வு, பூட்டான் ரூ 400 விலை உயர்வு, பாக்டம் பாஸ் ரூ400 விலை உயர்வு, அமோனியா சல்பேட், சூப்பர் பாஸ்பேட்க்கு தலா ரூ 200 விலை உயர்வு என்பது விவசாயம் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்படும் ஆகவே ஒன்றிய பாஜக அரசு இந்த விலை உயர்வை கைவிட வேண்டும் என்று அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பொதுமக்களுக்கு போதைப் பொருளால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு




திருப்பூர்: ஜூன் 01

திருப்பூரில் போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் தொண்டு அமைப்பு சார்பில் பொதுமக்களுக்கு போதைப் பொருளால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு திருப்பூர் புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. விழாவில் சேலம் ரயில்வே கோட்டம் DRUCC உறுப்பினர் ஜே.வி. சுரேஷ் குமார் கலந்துகொண்டு விழிப்புணர்வு முகாமினை திறந்து வைத்து துண்டு பிரசுரம் வழங்கினார். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மது பாட்டில் வடிவமைத்த அட்டைப்பெட்டி மூலம் மது ஒழிப்பு பாடலுக்கு நடனமாடி ராவணன் வேடமடைந்துமதுஅரக்கனைஅளிப்பது போன்று நாடகம் நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த விழாவில் பிரம்ம குமாரிகள் தொண்டு அமைப்பு ரமா பிரதா, கிருஷ்ணன், நாகேந்திரன், சிவமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.